# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2100 - 2018 නොවැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2018.11.30

*2100 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2504* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2509* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


*2501-B 81470-5,403 (2018/11)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கைப் பொலிஸில் விசேட அதிரடிப் படை பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி நேரடி ஆட்சேர்ப்புக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2019.01.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 x 3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.00

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800.00;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப் படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப் பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : ரூபா 5,712.00

(இ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு : ரூபா 1,500.00

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250.00 ;

(உ) மாதாந்த சம்பளத்தில் 1/ 4 கொடுப்பனவு ரூபா 3,570.00 ;

(ஊ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000.00 ;

(எ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 10,500.00 (ரூபா 350.00 x 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)

(ஏ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 8,400.00 (ரூபா 350.00 x 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வ தற்கான வசதிகள் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடின மான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரடிப்படையின் அடிப்படைப் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப்படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று 27 வயதிற்கு உட்பட்ட வர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/ தாய்மொழி இரண்டு பாடங்களிலும் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக் கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும்,

இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவர்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. த.) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) ***பௌதீகத் தகைமைகள் :***

* உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* மார்பு : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீகத் தகைமைகள் சற்றுக் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமையை பெறுவார்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவை.***- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்.***- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கைப் பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பங்களின்படி தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சை, தன்னம்பிக்கையை சோதிப்பதற்கான பரீட்சை, ஆரம்ப சக்தி மற்றும் பிரதிபலிப்பு சம்பந்தமான பரீட்சைகளில் பங்கு பற்றி அதிலும் சித்தியெய்தல் வேண்டும்.-

* உடற் தகுதிப் பரீட்சை :

| பயிற்சி | தடவைகள் | நேரம் (நிமிடத்தில்) |
|---|---|---|
| 1000 மீற்றர் ஓட்டம் | - | 04 |
| சின்அப்ஸ் (Chin ups) | 05 | 01 |
| புஷ் அப்ஸ் (Push ups) | 15 | 01 |
| சிட் அப்ஸ் (Sit ups) | 15 | 01 |
| ஸ்கொட் டிரஷ் (Scott thrush) | 12 | 01 |

- உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இவ் நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.

* பொது அறிவு மற்றும் நுண்ணறிவு பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர். மருத்துவ பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடநலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவ பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

7. **பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரரின் நன்னடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்னடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள்

மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணங்கள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**8. அரசகரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2007.04.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.-**

(அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படும் விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப் படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும், 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ் செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற் சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கை பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக் கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004

ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஐ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பகுதியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநல சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;
(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;
(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11'' x 8'' அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ இலங்கைப் பொலிஸினால் வழங்கப்படமாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப் படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறாக இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----.
பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இல. வீடு :-----.
கையடக்கத் தொலைபேசி இல. :------.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;
மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணமானவரா/ திருமணமாகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-
(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
(நிறுவனத் தலைவரின் கையொப்பம்)
பதவி முத்திரை இடப்படவேண்டும்

பதவி :-----.
திகதி :-----.

11-1205

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

2015.09.01 ஆந் திகதிய 1930/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019, மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

2. 2017.12.31 ஆந் திகதியன்று-

(i) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுதியின் I ஆம் தரத்தில் ஆகக்குறைந்தது 5 வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்து உரிய சம்பள ஏற்றங்கள் 5 இனைப் பெற்றுக்கொண்டுள்ள,

(ii) தரமுயர்வு வழங்கப்பட்ட தினத்திற்கு கிட்டிய 5 வருட காலப் பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்திய அலுவலர்கள் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

3. விசேட வகுப்பு அலுவலர்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள சம்பளத் திட்டம் செல்லுபடியாகும்:-

(MN-7-2016-A 4 ஆம் படிமுறை)

ரூபா 21,125-8 x 365 - 18 x 500 - ரூபா 33,045

4. இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும் :

(i) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் 2017.01.01 ஆந் திகதியிலிருந்து 2017.12.31 ஆந் திகதி வரை ஒவ்வோர் திணைக்களத்திலும் மற்றும் அமைச்சிலும் அந்தந்த பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும் ;

(ii) விசேட தரத்திற்கு இணைத்துக்கொள்வதற்கான மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டியது 2017.01.01 ஆந் திகதியிலிருந்து 2017.12.31 ஆந் திகதி வரை காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைகளை நிரப்புவதற்கு மட்டுமேயாகும் ;

(iii) **இணைத்துக்கொள்ளப்படும் சதவீதங்கள் :**
மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 40%
சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் 60%

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 4 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வெற்றி டங்கள் நிரப்பப்படுவது 25% (சதவீதம்) ஆக வும், சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப் படையிலே இணைத்துக்கொள்ளப்படும் சதவீதம் 75% ஆக இருக்க வேண்டியிருப்பதோடு, அங்கீகரிக் கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 3 ஆக இருக்கும் போது மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும் வெற் றிடங்களின் சதவீதம் 33.33% மற்றும் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் சதவீதம் 66.66% ஆகவும் இருக்க வேண்டும் ;

(v) இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 4 ஐ விட அதிகமாக இருப்பின் மேற்படி 4.(iii) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும் ;

(vi) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதில் சித்தி யடைபவர்கள் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய தேவைகளையும் பூரணப்படுத்தப்பட்டதாக அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும் தேர்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையின் திறமைகளின் ஒழுங்கில் மற்றும் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக் கைக்கு ஏற்ப பரீட்சை நடைபெற்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் விசேட வகுப்பிற்கான பதவியேற்றம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் ;

(vii) வெற்றிடங்களை நிரப்பும் சந்தர்ப்பத்தில் விண்ணப்ப தாரிகளுக்கிடையில் ஒவ்வோர் வெற்றிடங்களும், ஏற்பட்ட தினத்திற்கு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களின் திறமைகளின் ஒழுங்கிற்கு ஏற்ப குறித்துரைத்த பதவியேற்றத்திற்காக கவனத்திற்கொள்ளப்படும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக் கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க

விண்ணப்பதாரர் சுயமாக விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2018.12.31 ஆந் திகதிக்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவக மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

(i) பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியடையக் கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்ப தாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

(ii) மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட முடியும்.

7. **விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் :**

(i) "ஏ4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 5 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு மூலம் தயாரித்துக் கொள்ள முடியுமாயினும் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக் கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். அதனால், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது சாலவும் சிறந்ததாகும்.

(iii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப் பிட்டுள்ள மொழிமூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பரீட்சைக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம்மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iv) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும், அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் தோற்றும் அலுவலர்கள் 600.00 ரூபாவைப் பரீட்சைக் கட்டணமாக 20-03-02-13 என்ற பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்புக்கு யாதேனும் தபால் அலுவலகத்தில்/ உப தபால் அலுவலகத்தில் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்வதானது பிரயோசனமானது. இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை மீளப்பெறுவதற்கோ அல்லது வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றவோ அனுமதிக்கப்பட மாட்டார்.

8. (i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மட்டும் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், உள்வாங்கப்பட்டிருக்கும் அரச சேவை, விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப் பத்தினை உறுதிப்படுத்தலும், திணைக்களத் தலைவரின் பரிந்துரையும் அத்தாட்சிப்படுத்தலுடனும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்

பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அலுவலர்கள் அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாகக் கருதுதல் கூடாது.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டதன் பின்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது தொடர்பாகக் குறிப்பிட்டு செய்தித்தாள்களிலும் திணைக்கள உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அது தொடர்பாக ''பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு (நிறுவக மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையிடம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்துமிடத்து விண்ணப்பதாரி தாங்கள் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினையும் திருத்தமாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின் மேலுள்ள விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரணை செய்யும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதாவதொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தாங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்தல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும்போது பதிவுசெய்த பற்றுச் சீட்டினைத் தயார்படுத்தி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

(iii) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியுள்ளதுடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. மேலே (8) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

10. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்.**- இப் பரீட்சையின் பெறுபேறுகள் அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரினால் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. **பரீட்சை நடைமுறைகள்.**- (i) I ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 2 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(1) *உளச்சார்புப் பரீட்சை.*- நேரம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்
(2) *முகாமைத்துவம்.*- நேரம் : 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

தகுதிபெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

*முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :*

*உளச் சார்பு-பாட இலக்கம் (1).*- தனக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் சாதாரண செயலாற்றுகை மட்டத்தினைத் தாண்டிய செயற்றிறனைக் கொண்டதாக நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோநிலை என்பவற்றினை பெற்றிருக்கின்றனரா என்றும் அவற்றினைப் பிரயோகித்தலின்போது உச்ச திறமையினைக் காட்டுகின்றனரா எனவும் அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரீட்சிப்பாகும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான அமைப்பினைக் கொண்ட 50 வினாக்களையுடையதாகக் காணப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு:

*முகாமைத்துவம்-பாட இலக்கம் (2) :*

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :
திட்டமிடல்
தீர்மானங்கள் எடுத்தல்
தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகள்
ஒழுங்கமைப்பு

பதவிநிலைப்படுத்தல்
செயற்படுத்துதல்
ஊக்குவிப்புச் செயன்முறை
தலைமைத்துவம்
நிர்வாகம்
நிர்வாகக் கொள்கைச் செயன்முறை
(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்
(iv) முகாமைத்துவச் சூழல்
(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

*12.* பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாகவும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டவிதி களை மீறின், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார். இவ்வறிவித்தலுக்கு உரித்துடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப யாதேனுமொரு பரீட்சார்த்தி அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் காணுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது அதற்குப் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தம் இரத்துச் செய்யப்பட முடியும்.

*13.* இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

*14.* இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமாயின் சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லு படியானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்
மற்றும் நீதி அமைச்சு.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்
மற்றும் நீதி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2018, நவெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டுக்குரியது)

**இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I ஆம் அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

**Limited Competitive Examination for Promotion of the Officers in Grade I of Sri Lanka Technological Service to Special Grade - 2017**

*1.* (அ) பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம்-2
தமிழ்-3
ஆங்கிலம்-4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

நீங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது மாகாண அரச சேவையிலா, அவ்வாறல்லாதுவிடின் எவ்வகையான அரச சேவையில் என்பது-

(நீங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ள அரச சேவைக்குரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக.)

(மேல் மாகாண அரச சேவை - 01/ மத்திய மாகாண அரச சேவை - 02/ தென் மாகாண அரச சேவை - 03/ வட மாகாண அரச சேவை - 04/ கிழக்கு மாகாண அரச சேவை - 05/ வடமேல் மாகாண அரச சேவை - 06/ வடமத்திய மாகாண அரச சேவை - 07/ ஊவா மாகாண அரச சேவை - 08/ சப்பிரகமுவ மாகாண அரச சேவை - 09/ மத்திய அரசின் அரச சேவை - 10)

(ஆ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உதாரணம் : (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : (GUNAWARDHANA, H. M. S. K.)

(ஈ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(உ) அலுவலக முகவரி (இம்முகவரிக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்) :
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.
சிங்களத்தில்/ தமிழில் :----.

(ஊ) பால் (ஆண்-0, பெண்-1) : ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(எ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ஏ) தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. நீங்கள் பணிபுரியும் திணைக்களம் :----.

3. பதவிப் பெயர் :----.

4. 2017.12.31 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. (i) பிறந்த திகதி-

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2017.12.31 ஆந் திகதியன்று வயது-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

| |
|---|
| பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை அல்லாத விடத்து பரீட்சைக் கட்டணமான 600.00 ரூபாவைச் செலுத்திய பற்றுச் சீட்டினை இவ்விடத்தில் நன்றாக ஒட்டுக. (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடத்தில் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) |

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
செலுத்திய தொகை :----.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், மேல்குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துள்ளது என்றும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்ப மிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அல்லது தமது பிரதேச அலுவலகத் தலைவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தில் தற்போது பணிபுரியும் அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்த வருமான திரு./ திருமதி/ செல்வி .............................. என்பவர் ........................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதில் இருந்து விடுதலை என்றும் அல்லது குறித்துரைத்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதனையும் மேற்படி பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை) :----.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் சான்றிதழ்**

(i) இவ்விண்ணப்பதாரிக்கு எதிராக நடாத்தப்படும் அல்லது நடாத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக திணைக்களத் தலைவரின் பரிந்துரை
-----------------------------------------------
-----------------------------------------------

(ii) மேலே இல. 1 முதல் 5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப் பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அவர் தகுதியானவர் என்பதையும், பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார் என்றும் அல்லது உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும், கையொப்பமும் திகதியும் இடப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

பதவிப்பெயர் :----.
திகதி :----.

**குறிப்பு**.- உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று பரீட்சார்த்தியின் தனிப்பட்ட கோவைக்கு அனுப்பப்பட வேண்டும். மற்றைய பிரதி காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

திருத்தம்

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கான மாணவர் அனுமதி - 2019

*2019 ஆம் கல்வியாண்டிற்காக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக 02.11.2018 ஆந் திகதி அன்று வெளியிடப்பட்ட 2096 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவித்தல் இலக்கம் 11-320 பற்றியதாகும்.*

*2. மேற்படி வர்த்தமானி அறிவித்தலானது பின்வருமாறு, திருகோணமலை தொழில்நுட்ப கல்லூரிக்காக உள்ளடங்கப்பட்டுள்ள கற்கை நெறி பற்றிய விடயங்களுக்காக 21.12.2018 ஆந் திகதி அன்றோ அதற்கு முதல் நாளோ அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, திருகோணமலைக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட முடியும் என, திருத்தம் செய்யப்பட வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.*

3. நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரியில் இருந்து பின்வரும் CNC பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பாடநெறிகளுக்கான முடிவுத் திகதி 2018, திசெம்பர் 28 ஆகும்.

பி. என். கே. மலலசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்.

த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk

**திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2019 ஆம் ஆண்டு நடாத்தப்படவுள்ள பாடநெறிகளுக்கான கால அட்டவணை**

| தொடர் இல. | குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | பாடநெறிகளின் போதனா மொழி / NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பக் கல்லூரி |
|---|---|---|---|---|
| 01 | ECC 18 | எந்திரவியல்சார் கைப்பணியாளர் பயிற்சிக்கான தேசிய சான்றிதழ் (மோட்டார் வாகன பொறிமுறையாளர்)<br><br>முழு நேரம் - பகல் இரு வருடங்கள் | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் கணிதம், போதனா மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>2. உரிய துறையில் NVQ 3 தகைமை பெற்றிருக்க வேண்டும்.<br>3. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்:**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |

| தொடர் இல. | குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | பாடநெறிகளின் போதனா மொழி / NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பக் கல்லூரி |
|---|---|---|---|---|
| 02 | ECS 27 | மோட்டார் வாகன மின்னியலாளர்<br>முழு நேரம் - பகல்<br>ஆறு மாதங்கள் | 1. தரம் 10 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை |
| 03 | ETC 05 | எந்திரவியல் படவரைவியலுக்கான தேசிய சான்றிதழ்<br><br>முழு நேரம் -பகல்<br>ஒரு வருடம் | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் நான்கு (04) திறமைச் சித்திகள் கணிதம் / விஞ்ஞானம் மற்றும் போதனாமொழி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(க.பொ.த. உயர்தரத்தில் கணிதப் பிரிவு/பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் கற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)<br><br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |
| 04 | ECS 31 | பொறியியல் கைவினை பயிற்சியில் தேசிய சான்றிதழ் - (பிளம்பர்)<br><br>முழு நேரம் - பகல்<br>ஆறு மாதங்கள் | 1. தரம் 10 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை |
| 05 | ECC 01 | நிர்மாணத்துறை தள மேற்பார்வையாளர்<br><br>முழு நேரம் - பகல்<br>ஒரு வருடம் | 1. இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த (சா.த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் போதனா மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |

| தொடர் இல. | குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | பாடநெறிகளின் போதனா மொழி / NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பக் கல்லூரி |
|---|---|---|---|---|
| 06 | ETC 01.1 | தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழ் (குடிசார் எந்திரவியல்)<br><br>பகுதி நேரம் - மூன்று வருடங்கள்<br><br>(உரிய துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது). | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆறு (06) பாடங்களும் பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.<br>(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்<br>(ஆ) கணிதம், மற்றும் விஞ்ஞானம்<br>(இ) வேறு மூன்று பாடங்கள்<br><br>அல்லது<br><br>2. உரிய துறையில் NVQ 3 /4 தகைமை பெற்றிருக்க வேண்டும்.<br><br>3. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 5**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 5**<br>திருகோணமலை |
| 07 | ECC 03 | கணினி வன்பொருளுக்கான சான்றிதழ்<br><br>முழு நேரம் - பகல் ஆறு மாதங்கள் | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் கணிதம், விஞ்ஞானம், போதனாமொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>அடிப்படைக் கணினி விஞ்ஞானப் பாடநெறியைக் கற்றிருத்தல் வேண்டும்.<br><br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை |
| 08 | ECC 12 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்<br><br>முழு நேரம் - பகல் ஆறு மாதங்கள் | 1. .க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் கணிதம், போதனாமொழி மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |

| தொடர் இல. | குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | பாடநெறிகளின் போதனா மொழி / NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பக் கல்லூரி |
|---|---|---|---|---|
| 09 | ECC 54 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (IT Supporter) | 1. .க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், விஞ்ஞானம், போதனாமொழி மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |
| 10 | ECC 22 | மின்னியல் தொழில்துறை தொடர்பான சான்றிதழ்<br><br>முழு நேரம் - பகல் ஒரு வருடம் | 1. .க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (6) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |
| 11 | ECC 21 | வீட்டுப் பாவனை மின்னியல் உபகரணங்கள் திருத்துதலில் சான்றிதழ்<br><br>முழு நேரம் - பகல் ஆறு மாதங்கள் | 1. தரம் 10 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |
| 12 | BSC 04 | கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ்<br><br>முழு நேரம் - பகல் ஒரு வருடம் | 1. க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளில் கணிதம், போதனா மொழி உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 4**<br>திருகோணமலை |
| 13 | ESC 02 | தொழில்சார் ஆங்கிலம் தொடர்பான தேசிய சான்றிதழ்<br>முழு நேரம் - பகல் ஒரு வருடம் | 1. க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கில மொழி உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **ஆங்கில மொழி மூலம்:**<br>திருகோணமலை |

| தொடர் இல. | குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | பாடநெறிகளின் போதனா மொழி / NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பக் கல்லூரி |
|---|---|---|---|---|
| 14 | ECC 02 | எந்திரவியல்சார் கைப்பணியாளர் பயிற்சிக்கான தேசிய சான்றிதழ் (வளைவுருக்கி ஒட்டுநர்)<br><br>முழு நேரம் - பகல்<br>ஒரு வருடம் | 1. தரம் 10 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை |
| 15 | BSC 20 | சுருக்கெழுத்து, தட்டச்சு மற்றும் கணினியில் தேசிய சான்றிதழ்<br>முழு நேரம் - பகல்<br>ஒரு வருடம்<br><br>(இப்பாடநெறிக்காக NVQ 3 மட்டம் வழங்கப்படுவது கணினி பிரயோக உதவியாளர் தொழிலுக்கு) | 1. க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் போதனா மொழி, கணிதம், உட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>சிங்கள மொழி / தமிழ் மொழியில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை |
| 16 | ECC 05 | எந்திரவியல்சார் கைப்பணியாளர் பயிற்சிற்கான தேசிய சான்றிதழ்<br><br>(குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் இயந்திரவியல்)<br><br>முழு நேரம் - பகல்<br>ஒரு வருடம் | 1. க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், விஞ்ஞானம், போதனாமொழி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி<br><br>அல்லது<br><br>2. உரிய துறையில் NVQ 3 தகைமை பெற்றிருக்க வேண்டும்.<br><br>3. 2019.01.01 இல் 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை |
| 17 | MCS 29 | தாதி உதவியாளர் (Nurse Assistant)<br><br>முழு நேரம் - பகல்<br>மூன்று மாதங்கள் | 1. க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், விஞ்ஞானம், போதனாமொழி மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br><br>2. 2019.01.01 இல் 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை<br><br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம் 3**<br>திருகோணமலை |

| *தொடர் இல.* | *குறியீட்டு எண்* | *பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை* | *அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள்* | *பாடநெறிகளின் போதனா மொழி / NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பக் கல்லூரி* |
|---|---|---|---|---|
| *18* | MCS 26 | பராமரிப்பு வழங்குநர்<br>(Care Giver)<br>முழு நேரம் - பகல்<br>மூன்று மாதங்கள் | 1. க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்<br>2. 2019.01.01 இல் 17 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம்** *3*<br>திருகோணமலை<br>**தமிழ் மொழிமூலம்**<br>**NVQ மட்டம்** *3*<br>திருகோணமலை |

## CNC (Computer Numerical Control) **கற்கை நெறிகள்**

| *தொடர் இல.* | *குறியீட்டு எண்* | *பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை* | *அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள்* | *பாடநெறிகளின் போதனா மொழி / NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பக் கல்லூரி* |
|---|---|---|---|---|
| *19* | ECS 60 | CNC Milling செயற்படுத்துநர்<br>முழு நேரம் - பகல்<br>மூன்று மாதங்கள் | 1. NVQ மட்டம் 3 பொறிமுறையில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>பொறிமுறை பாடநெறியில் ஆகக் குறைந்தது ஒரு வருடம் பயின்றிருக்க வேண்டும்.<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம்** *4*<br>மருதானை, நுவரெலியா |
| *20* | ECC 58 | CNC பொறிமுறையாளர்<br>முழு நேரம் - பகல்<br>ஒரு வருடம் | 1. ஆகக் குறைந்தது, க. பொ. த. உயர் தரத்தில் எந்திரவியல் தொழில் நுட்பம்/கணிதம்/ விஞ்ஞானம் ஆகிய 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (க. பொ. த. உயர் தரத்தில் எந்திரவியல் தொழில்நுட்பப் பிரிவில் பின்பற்றிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)<br>2. 2019.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். | **சிங்கள மொழிமூலம்**<br>**NVQ மட்டம்** *4*<br>நுவரெலியா |

*11-1431*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.